**காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்**

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 27ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் தேதி, செவ்வாய்கிழமை**

**குறள்:400**

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

**குறள் விளக்கம்:**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

**பொன்மொழி**

அறிவுத்தேவையை விட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது.

**பழமொழி**

*Bend the twig, bend the tree*

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

**பொதுஅறிவு வினா விடை**

- தமிழின் முதல் அகராதியை தொகுத்தவர் - வீரமாமுனிவர்
- காவிரி ஆற்றின் மொத்த நீளம் – 760 கி.மீ.

**இரண்டொழுக்க உறுதிமொழி**

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

*Abbreviations*

D.D. - Demand Draft - கேட்பு வரைவோலை

DA - Dearness Allowance - அகவிலைப்படி

## இன்றைய செய்திகள்

- கொரோனா குறித்த வீண் வதந்திகளை நம்பி யாரும் பீதியடைய வேண்டாம்: என்று சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.
- மிழகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து முதலமைச்சர் பழனிசாமி தலைமையில் ஆலோசனை நடைபெற்றது.
- இந்தியாவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்துள்ளது.
- இத்தாலியில் இருந்து கேரளா வந்த 3-வயது குழந்தைக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது.
- மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக பள்ளிகளில் பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை மார்ச் 31 வரை நிறுத்தப்பட்டுள்ளது.
- சென்னையை தொடர்ந்து தமிழகத்தில் இரண்டாவதாக தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் கொரோனா ஆய்வகம் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

Learn more in our School